## (CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

**IN THE COURT OF THE I ADDL.DIST. COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS**

அசல் வழக்கு எண்.17/2016 வா.சா.2

Name : S.நிஜாம்அலிகான்
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 14-02-2023.

முதல் விசாரணை:-

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். நான் மதுரை மகபூப்பாளையம் ஜமாத் தலைவர். நான் 2015 டிசம்பர் முதல் இன்று வரை பதவி வகித்து வருகிறேன். 1 ம் பிரதிவாதியான செய்யது அபுதாகிர் வாதி மீது தாவாச் சொத்து சம்பந்தமாகவும், வாதியின் மகளுடைய நகை சம்பந்தமாகவும் ஜமாத்தார்கள் பேசி முடிக்கச் சொல்லி மனு கொடுத்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் நான் மதுரை மகபூப்பாளையம் ஜமாத் தலைவர் ஆக இருந்த காலத்தில் மனு எதுவும் 1 ம் பிரதிவாதி தரப்பில் கொடுக்கவில்லை. 2013 ம் வருடம் R.பிராம்பெய்க் என்பவர் தலைவராக இருந்தார். மதுரை மகபூப்பாளையம் ஜமாத்தில் R.பிராம்பெய்க் என்பவர் 2013 ம் வருடம் எந்த மாதம் பதவி வகித்தார் என்ற விபரம் எனக்கு தற்போது ஞாபகமில்லை. 1 ம் பிரதிவாதி வாதி மீது கொடுத்த புகார் குறித்து 2013 ல் பதவி வகித்த ஜமாத் தலைவரை அழைத்து விசாரித்தால் விபரம் தெரிய வரும் என்றால் வாய்ப்பு உள்ளது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.